பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

13 09 2025 SATURDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- மணிப்பூரின் வளர்ச்சி மற்றும் எதிர்கால சந்ததியினரின் நலனை கருத்தில்கொண்டு அம்மாநில மக்கள் செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

- வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் பாடுபட வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா கேட்டுக்கொண்டுள்ளார்.

- தமிழகத்தில் திட்ட முகாம்கள் மூலம் பெறப்படும் மனுக்களுக்கு அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

- இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளராக திரு மு. வீரபாண்டியன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- ஹாங்காங் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இநதியாவின் லக்ஷ்யா சென் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள் –

<<<<>>>>>

மணிப்பூரின் வளர்ச்சி மற்றும் எதிர்கால சந்ததியினரின் நலனை கருத்தில்கொண்டு அம்மாநில மக்கள் செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

மணிப்பூரின் Churachandpur-ல் 7 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் புதிய திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டி பேசிய அவர், மத்திய அரசு அண்மையில் மணிப்பூர் மலைப்பகுதிகள் மற்றும் பள்ளத்தாக்குகளில் உள்ள பல்வேறு குழுக்களோடு நடத்திய பேச்சுக்கள் திருப்திகரமாகவும், ஆக்கப்பபூர்வமாகவும் இருந்ததாக குறிப்பிட்டார்.

மணிப்பூரில் அமைதியை நிலைநாட்ட விரிவான முயற்சிகளை மத்திய அரசு எடுத்துள்ளதாக தெரிவித்த பிரதமர், பேச்சுவார்த்தைகளுக்கு உயர் முன்னுரிமை, பரஸ்பரம் புரிதல் மற்றும் மதிப்போடும் இந்த குழுக்களுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

மணிப்பூரில் தொடங்கிவைக்கப்பட்டுள்ள 7 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான இந்த வளர்ச்சித் திட்டங்கள் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் என்று திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<>>>>>

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் பாடுபட வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா வலியுறுத்தியுள்ளார்.

பெங்களூருவில் இன்று நடைபெற்ற 11-ஆவது காமன்வெல்த் இந்திய மண்டல கருத்தரங்கில் உரையாற்றிய அவர், உறுப்பினர்கள் மக்கள் நலனுக்கான விவாதங்களுக்கு உயர் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சமூக மற்றும் நாட்டு நலன்கருதி ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெறுவதற்கு அவர்கள் உதவிகரமாக இருக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற இந்த கருத்தரங்கில், நாட்டின் இலக்குகளை எட்டுவதற்கான சிறந்த நடைமுறைகள் குறித்து உறுப்பினர்கள் விவாதித்ததாக அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை பாதுகாக்கும் பொறுப்பு உறுப்பினர்களுக்கு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் வேறுபாடுகளை கடந்து மக்கள் நலனில் உறுப்பினர்கள் அக்கறை செலுத்த வேண்டும் என்று திரு ஓம். பிர்லா கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>>

தமிழகத்தில் திட்ட முகாம்கள் மூலம் பெறப்படும் மனுக்களுக்கு அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட முதலமைச்சர், வருவாய், கூட்டுறவு, ஆதிதிராவிடர் நலன், எரிசக்தி, ஊரக வளர்ச்சி உள்ளிட்ட முக்கியத்துறைகளில் பெறப்படும் மனுக்கள் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நகராட்சி நிர்வாகத்துறையில் சொத்துவரி, குடிநீர் தொடர்பான கோரிக்கைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

விவசாயிகளின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும், ரேஷன் கார்டுகளில் முகவரி மாற்றம், பட்டா சம்பந்தமான மனுக்கள் மீதும் உடனடி நடவடிக்கை தேவை என்றும் அவர் தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் மகளிர் உரிமை தொகை திட்டம் தொடர்பாக விரைந்து கள ஆய்வு மேற்கொண்டு முடிவெடுக்க வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

<<<<>>>>>

தமிழகத்தில் அனைத்துத்துறைகளிலும் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் செயற்கை நுண்ணறிவு திறன் பயிற்சியை தொடங்கிவைத்து பேசிய அவர், செயற்கை நுண்ணறிவு குறித்த விழிப்புணர்வு மக்களிடையே ஏற்பட வேண்டும் என்று கூறினார்.

இந்த தொழில்நுட்பம் குறித்து மக்கள் அச்சப்பட தேவையில்லை என்றும் திருமதி கீதா ஜீவன் தெரிவித்தார்.

<<<<>>>>>

மத்திய அரசின் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியதற்காக காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியம் விசூர் ஊராட்சிக்கு பாராட்டு சான்றிதழ் கிடைத்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் தெரிவித்த விசூர் ஊராட்சி மன்றத்தலைவர் திரு மூர்த்தி, பிரதமரின் அனைவருக்கும் வீட்டுவசதி திட்டம், ஜல் ஜீவன் திட்டம் போன்றவற்றை தங்கள் ஊராட்சியில் செயல்படுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

<<<<>>>>>

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய மாநில செயலாளராக திரு மு. வீரபாண்டியன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற கட்சியின் மாநிலக்குழு கூட்டத்தில், திரு மு. வீரபாண்டியன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதுவரை அப்பதவி வகித்து வந்த திரு முத்தரசனின் பதவிக்காலம் முடிவடைந்ததையடுத்து, புதிய மாநிலச் செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய மாநில செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு மு வீரபாண்டியனுக்கு, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் வரும் மூன்று நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், அடுத்த 24 மணிநேரத்தில் ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று கூறினார்.

<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

*கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அரசு உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான ஆய்வுக்கூட்டம், ஆட்சியர் திரு பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது.*

----------------

*காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு , ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.*

--------------

*கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இன்று நடைபெற்ற மக்கள் நீதிமன்ற சிறப்பு முகாமில் 13 கோடி ரூபாய் மதிப்பிலான ஆயிரத்து 200 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டது.*

--------------

*மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியை அடுத்த புத்தூரில் சிறப்பு மருத்துவ முகாமை ஆட்சியர் திரு ஸ்ரீகாந்த் தொடங்கிவைத்தார்.*

-----------------

*ராமநாதபுரம் – ராமேஸ்வரம் இடையேயான மின்மயமாக்கப்பட்ட ரயில் பாதையை, தெற்கு ரயில்வேயின் முதன்மை தலைமை பொறியாளர் திரு கணேஷ் ஆய்வு செய்தார்.*

-------------------

*திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அருகே அரசு பேருந்தும், வேனும் நேருக்கு நேர் மோதியதில் மூன்று பேர் உயிரிழந்தனர்.*

-------------------

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் பகுதியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட மூன்று பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

-------------------

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து மீண்டும் அதிகரித்துள்ளதால் சுற்றுலாப் பயணிகள் அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>>

## விளையாட்டுச் செய்திகள்

ஹாங்காங் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 23-21, 22-20 என்ற செட் கணக்கில், தைவானின் Tien Chen Chou-ஐ வென்றார்.

-------------------

உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் மீனாட்சி இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்தின் Liverpool-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 48 கிலோ எடைப்பிரிவு அரையிறுதியில் அவர், 5-0 என்ற புள்ளிக்கணக்கில், மங்கோலியாவின் Altantsepseg -ஐ வென்றார்.

-------------------

புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் உத்தரப்பிரதேசம் – ஜெய்பூர் அணியையும், புனே – தெலுகு அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<END>>>>>